# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 08 செவ்வாய்க்கிழமை 23.12.2025 கதிர் 417







# இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு 450 மில்லியன் டொலர் சலுகைப் பொதி

## அநுரவிடம் ஜெய்சங்கர் தெரிவிப்பு











**கொழும்பு, டிச. 23**

**இலங்கையின் முன்னுரிமைகளை அடையாளம் கண்டு, மீளக் கட்டியெழுப்பும் அவசர தேவைகளை நிவர்த்தி செய்வதில் இந்தியா தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்பட உள்ளதாவும் அதன்படி, இலங்கைக்கு 450 மில்லியன் டொலர் சலுகைப் பொதியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.**

**இதில், 100 மில்லியன் டொலர் இந்திய உதவி என்பதோடு மீதமுள்ள தொகை சலுகை வட்டி விகிதத்தின் அடிப்படையிலான கடனாகும்.**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையின் கீழ் இலங்கை மிக விரைவில் மீண்டு வரும் என்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளதாகத் தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர், இலங்கையின் மீளக்கட்டியெழுப்பும் திட்டத்துடன் இந்தியா முன்னெப்போதையும் விட அதிக அர்ப்பணிப்புடன் கைகோர்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம்செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கும் இடையிலான சந்திப்பு இன்று (23) காலை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட விசேட கடிதத்தையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு முயற்சிகளுக்கும், இயல்பு வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இந்தியப் பிரதமரும் அரசாங்கமும் அளித்த மனப்பூர்வமான ஆதரவை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நன்றியுடன் பாராட்டினார்.

மீட்புப் பணிகளுக்கு ஹெலிகொப்டர்கள், மருந்துகள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகளை வழங்குவதிலும், சேதமடைந்த வீதிகளை மீளமைப்பதிலும், மகியங்கனை வைத்தியசாலை உள்ளிட்ட வைத்தியசாலை கட்டமைப்பை மறுசீரமைப்பதிலும் இந்திய அரசாங்கம் அளித்த விசேட ஆதரவையும் ஜனாதிபதி நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

ஒவ்வொரு கடினமான சமயத்திலும் இந்தியா இலங்கைக்கு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவை ஜனாதிபதி ஞாபகமூட்டியதோடு பேரழிவுக்குப் பிறகு இலங்கையின் மீளமைப்பு செயற்பாட்டிற்கு வழங்கும் ஒத்துழைப்பு இந்திய-இலங்கை உறவுகளில் ஒரு புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த கடினமான சமயத்தில் இலங்கையுடன் பலமாக இணைந்திருக்கவும், இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளை வழங்கவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனக்கு அறிவுறுத்தியதாகவும், அந்த முயற்சிகளை ஆராய்வதற்காக இந்தியப் பிரதமரின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு தான் விஜயம் மேற்கொண்டதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

7 ➤

## யாழ்தேவி ரயிலில் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு!



பளை, டிச. 23

யாழ்தேவி ரயிலில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று பளை, முகமாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ரயில் வழித்தடத்தில் பாதுகாப்பற்ற கடவையின் ஊடாக மோட்டார் சைக்கிளில் சென்ற நபரே ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

7 ➤

## அர்ச்சுனா எம்.பிக்குப் பிடியாணை



கொழும்பு, டிச. 23

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

போக்குவரத்து விதிகளை மீறி தமது வாகனத்தை நிறுத்தியமை மற்றும் புறக்கோட்டை பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இன்று கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் விசாரணைக்காக அழைக்கப்பட்டது.

7 ➤

## இலங்கை மீண்டெழ இந்தியா முழு ஆதரவு!

### ஹரிணியிடம் ஜெய்சங்கர் உறுதிமொழி



கொழும்பு, டிச. 23

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர், இன்று அலரி மாளிகையில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து, இலங்கை மீளக்கட்டியெழுப்பும்

7 ➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



# வரலாற்றில் உச்சம் தொட்ட தங்கம் விலை

கொழும்பு, டிசெ.23

உலகச் சந்தையில் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, இலங்கையிலும் தங்கத்தின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

இன்று (23) உலகச் சந்தையில் ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை வரலாற்றில் முதன் முறையாக 4,485 டொலர்கள் வரை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினத்துடன் ஒப்பிடுகையில் இன்று நாட்டில் தங்கத்தின் விலை சுமார் 7,000 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

கொழும்பு செட்டியார் தெருவின் இன்று காலை நிலவரப்படி, 22 கரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை 325,600 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதேநேரம் நேற்று 344,000 ரூபாவாகக் காணப்பட்ட 24 கரட் ஒரு பவுன் தங்கத்தின் விலை, இன்று 352,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# லஞ்ச் சீட் பாவனையை முடிவுக்கு கொண்டு வரும் பருத்தித்துறை நகரசபை



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட ஹோட்டல்கள் மற்றும் உணவுகளை கையாளும் நிலையங்களில் லஞ்ச் சீட் பாவனை முற்றாக தடை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தடையானது 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல்கள் மற்றும் உணவுப் பொருட்களைக் கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வியாபார நிலையங்களின் வியாபார உரிமம் நகரசபையின் தவிசாளருக்கு உள்ள அதிகாரத்தின் கீழ் இடைநிறுத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

லஞ்ச் சீட் பாவனைக்கு மாற்றீடாக வாழை இலை, தாமரை இலை, தேக்கம் இலை போன்றவற்றையும் உணவு பொதியிடலின் போது ஈய பேப்பர் மற்றும் உணவு பொதியிடலுக்காக அனுமதிக்கப்பட்ட கொள்கலன்களை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. (ஐ)

# தனிப்பட்ட முரண்பாட்டில் ஒருவர் கொலை

மாரவில பொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட துன்கன்னாவ பகுதியில் ஆயுதம் ஒன்றினால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று (22) பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உயிரிழந்தவருக்கும் அவரது அயல் வீட்டாருக்கும் இடையே தனிப்பட்ட முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

அது பாரதூரமானமை காரணமாக அயல் வீட்டில் வசிக்கும் நபர் ஆயுதம் ஒன்றினால் தாக்கி, குறித்த நபரை கொலை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் சேர்ந்த 38 வயதுடைய மாரவில - துன்கன்னாவ பகுதியைச் சேர்ந்தவர் என குறிப்பிடப்படுகின்றது.

இக்கொலைச் சம்பவம் தொடர்பில் 43 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாரவில பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# சுகாதார அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்த கோரிக்கை



கொழும்பு, டிசெ.23

'சர்ச்சைக்குரிய 'ஒன்டன்செட்ரான்' (முனெயளெநவசழுஉ) ஊசி மருந்துகள் தொடர்பான அனைத்து விபரங்களையும், இலங்கையிலுள்ள ஆய்வகங்களின் தரப் பரிசோதனைத் திறனையும் சுகாதார அமைச்சர் பகிரங்கப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றையதினம் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர்,

குறித்த ஊசி மருந்துகளின் தரம் குறித்து எழுந்துள்ள சந்தேகங்களை விசாரிக்க உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் இலங்கையில் உள்ளனவா என்று கேள்வி எழுப்பினார்.

சந்தேகத்திற்குரிய இந்த மருந்துத் தொகுதிகளை முறையான ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான வசதிகள் மற்றும் நிபுணத்துவத் திறன் இலங்கை ஆய்வகங்களுக்கு இருக்கின்றனவா என்பது குறித்து தெளிவான விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், அதிநவீன வசதிகளுடன் கூடிய ஆய்வகங்களை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என்றும், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்றும் அவர் தனது அறிக்கையில் கேள்வியெழுப்பியுள்ளார்.

பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்புடன் தொடர்புடைய இந்த விடயத்தில் சுகாதார அமைச்சர் உண்மைகளை மறைக்காமல் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.(ஐ)

## அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது ஆபத்தானது! எச்சரிக்கும் எம்.பி

இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது ஆபத்தானது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம்(ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

திருகோணமலை மாவட்ட கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் தொடர்பான உப குழு கூட்டம் திங்கள்,செவ்வாய் ஆகிய தினங்களில் ஆளுங்கட்சியின் ரொஷான் அக்மீமன எம்பியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனக்கோ குகதாசன் எம். பி க்கோ இந்த கூட்டத்திற்கு அழைப்பு இல்லை. மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்க்கட்சியின் வசம் இருப்பதால் உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்களுக்கும் அழைப்பு இல்லை.

தனியொரு எம்.பியால் அதிகாரிகளை வைத்து இந்த கூட்டம் நடைபெறுகின்றது. இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டு கருத்து சொல்வதற்கான வாய்ப்பை இந்த அரசாங்கம் முடக்கியுள்ளது.



இதன் மூலம் இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது தெளிவாகின்றது. இது ஆபத்தான விடயமாகும். ஜனநாயகத்தை பாதுகாப்பதாக கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் சர்வாதிகாரத்தை நோக்கி செல்வது குறித்து பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பயங்கரவாதத் எதிர்ப்பு சட்டத்திற்கான புதிய வரைவு இன்னும் இறுதி செய்யப்படவில்லை

கொழும்பு, டிசெ.23

பயங்கரவாதத் எதிர்ப்பு சட்டத்திற்கான புதிய வரைவு இன்னும் இறுதி செய்யப்படவில்லை என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி ரீன்சி அர்சகுலரத்ன தலைமையிலான குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரைவு, அமைச்சரவை அல்லது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்று திருத்தப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

இந்த வரைவு தற்போது நீதி அமைச்சின் இணையதளத்தில்தமிழ், சிங்களம்மற்றும்ஆங்கிலம்ஆகிய மூன்று மொழிகளிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மற்றும் ஆர்வலர்கள் இது தொடர்பான தங்களது பரிந்துரைகளை 2026 பெப்ரவரி 28 ஆம் திகதிவரை சமர்ப்பிக்க முடியும் எனவும், பெறப்படும் கருத்துக்கள் ஆய்வுக்காக மீண்டும் அதே தயாரிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் உணர்வுபூர்வமான மற்றும் முறையான சட்டத்தை உருவாக்குவதற்கு தனிநபர்கள், அமைப்புகள் மற்றும் குழுக்களின் பங்களிப்பு அவசியம் என்பதால், அனைவரையும் தமது கருத்துக்களை வழங்குமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

## சந்தை வியாபாரிகளின் பிரச்சனை குறித்து கலந்துரையாடல்

திருகோணமலை பிரதான மரக்கறி வியாபாரிகளின் சந்தையில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக திங்கட்கிழமை அன்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் தற்போதைய நிலையில் உருவாகியுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அவற்றைத் தீர்ப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.



அனைத்து தரப்பினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயல்படுவது மற்றும் நீண்ட கால தீர்வுகள் குறித்து விரிவாக பேசப்பட்டது. மேலும் சந்தை அபிவிருத்தி மற்றும் அதற்காக எதிர் காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாநகர சபை மேயர் க.செல்வராசா (சுப்ரா)அவர்கள், முதலமைச்சின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் மரக்கறி வியாபாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## மின்சார சபையின் தன்னார்வ ஓய்வுக்காலத் திட்டத்தில் இழுபறி: 2,200 ஊழியர்கள் பாதிப்பு



இலங்கை மின்சார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட தன்னார்வ ஓய்வுக்காலத் திட்டத்திற்கு விண்ணப்பித்த 2,200க்கும் மேற்பட்ட ஊழியர்கள், அத்திட்டம் தொடர்ச்சியாக தாமதமாவதால் மிகுந்த கவலையும் நிச்சயமற்ற தன்மையும் அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் இது தொடர்பாக வலுசக்தி அமைச்சருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

அதில், இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் உத்தியோகபூர்வ திகதியை உடனடியாக அறிவிக்குமாறு வலியுறுத்தியுள்ளனர்.

இந்த இழுபறி நிலை தங்களின் எதிர்காலத் திட்டங்களைச் சீர்குலைத்துள்ளதோடு, கடுமையான மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் எச்சரித்துள்ளனர்.

ஓய்வுக்குப் பிந்தைய வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்லும் வகையில், மாற்று வேலைவாய்ப்புகள், சுயதொழில் முயற்சிகள் அல்லது வெளிநாட்டுப் பயணங்கள் போன்றவற்றுக்கு ஊழியர்கள் ஏற்கனவே தயாராகியுள்ளனர்.

ஆனால் முறையான திகதி அறிவிக்கப்படாததால் அவர்கள் எவ்வித முடிவும் எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, துணை நிறுவனங்களுடன் இனி இணைந்திருக்கப் போவதில்லை என்ற முடிவின் அடிப்படையிலேயே இவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பித்துள்ளனர். அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இந்த ஓய்வுக்கால முயற்சிக்குத் தங்களின் ஆதரவைத் தெரிவித்துள்ள அதேவேளை, சில தரப்பினரின் சதி நடவடிக்கைகள் காரணமாகவே இந்த நடைமுறை தாமதமாவதாக ஊழியர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ை)


## மூத்த கலைஞர் சதிஸ்சந்திர எதிரிசிங்க காலமானார்

மூத்த கலைஞர் சதிஸ்சந்திர எதிரிசிங்க தமது 84 வது வயதில் காலமானார். அவர் உடல் நலக்குறைவினால் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரபல பாடகர் சுனில் எதிரிசிங்கவின் சகோதரரான சதிஸ்சந்திர எதிரிசிங்க, நடிப்பு மற்றும் இயக்கம் ஆகிய இரு துறைகளிலும் கலை உலகிற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கிய ஒரு இணையற்ற கலைஞர் ஆவார். 1941 பெப்ரவரி 10 ஆம் திகதி களனியில் பிறந்த பட்டிகிரிகே சதிஸ்சந்திர எதிரிசிங்கவின் கலை வாழ்க்கை அரை நூற்றாண்டிற்கும் மேற்பட்ட நீண்ட வரலாற்றைக் கொண்டது.

1986 ஆம் ஆண்டு காமினி பொன்சேகா இயக்கிய 'கெட்டி வலிகய' திரைப்படத்தில், ஒரு சிங்கள இளைஞனாக வெறும் 90 வினாடிகள் மட்டுமே நடித்ததற்காக அவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அதேநேரம் 1987 ஆம் ஆண்டு சரசவி விருது விழாவில், பௌத்த துறவி ஒருவராக அவர் வெளிப்படுத்திய சிறந்த நடிப்புத் திறமைக்காக அவருக்கு சிறப்பு நடுவர் விருது வழங்கப்பட்டது.

1963 ஆம் ஆண்டு அவர் முதன்முதலில் தயாரித்த 'பகதபஸ்' என்ற மேடை நாடகம் அரங்கேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது மண்ணின் மைந்தர்கள் உரிமை சொல்கிறார் கிருஷ்ணசாமி



''திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றுவது மண்ணின் மைந்தர்களின் உரிமை. இங்கு தீபம் ஏற்றுவது, தமிழ் மண்ணோடு, மொழியோடு பின்னிப் பிணைந்த ஒரு கலாசாரமாக இருக்கிறது,'' என புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

ராஜபாளையத்தில் அவர் அளித்த பேட்டி: பல ஆண்டுகளாகியும் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய பலன்கள் கிடைக்கவில்லை. அதிகாரிகள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக ஜாதி ரீதியில் பணி ஒதுக்கீடு, விடுப்பு வழங்குகின்றனர். போக்குவரத்து துறையில் பல்வேறு குளறுபடிகளால் ஊழல் மலிந்துள்ளது.

தி.மு.க.,வினர் பல லட்சம்பேரை, போலி வாக்காளர்களாக சேர்த்துள்ளனர் அவர்களை நீக்கினால், பாதிப்பு ஏற்படும் என்பதாலேயே வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை எதிர்க்கின்றனர். அரசியல் காரணங்களுக்காக, மத்திய அரசை எதிர்க்க வேண்டும் என்பதற்காக, எஸ்.ஐ.ஆர்., பணியை எதிர்க்கின்றனர்.

முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்று திருப்பரங்குன்றம். இந்த மலைப் பகுதியும் முருகனுக்கு சொந்தமானது. அதில் தீபம் ஏற்றுவது தவறில்லை. அது மண்ணின் மைந்தர்களின் உரிமை. இங்கு தீபம் ஏற்றுவது, தமிழ் மண்ணோடு, மொழியோடு பின்னிப் பிணைந்த ஒரு கலாசாரம். இவ்விவகாரத்தில், தமிழக அரசின் அணுகுமுறை முற்றிலும் சரியல்ல.

இது, ஹிந்து- முஸ்லிம், ஹிந்து -கிறிஸ்துவ பிரச்னை அல்ல. இதில், தி.மு.க., அரசியல் செய்வது நல்லதல்ல. கிரானைட் துாண், எல்லைக்கல், சமணர் துாண் என கூறிவிட்டு, எதையும் நிரூபிக்க முடியாத நிலையில் தற்போது தி.மு.க., அரசு தவிக்கிறது. யாரோ தமிழக அரசை தவறாக வழி நடத்துகின்றனர்.

தேர்தலில் தி.மு.க., அரசு, வாக்காளர்களுக்கு 5,000 கொடுத்தாலும், 50,000 ரூபாய் கொடுத்தாலும் ஓட்டுகள் எதிர்ப்பாகத்தான் விழும். ஆட்சியின் அலங்கோலத்தை, மக்கள் புரிந்து கொண்டு உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# தமிழகம் முழுதும் கலைத்திருவிழா: முதல்வர் ஸ்டாலின் உத்தரவு



சென்னை சங்கமம் விழாவை போல, மாநிலம் முழுதும் பாரம்பரிய கலைத்திருவிழா நடத்த, கலெக்டர்களுக்கு, முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் ஆண்டுதோறும் தை மாதம், 'சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா' என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. வரும் ஜன., 14ம் திகதி, இந்த நிகழ்ச்சி துவங்க உள்ளது.

இதேபோல, தமிழகம் முழுதும் அனைத்து மாவட்டங்களிலும், மாநிலத்தின் பாரம்பரிய கலைத்திருவிழாவை நடத்தும்படி, கலெக்டர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் 14ம் தேதி மாலை 6:00 மணிக்கு, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில், சென்னை சங்கமம் விழாவை முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைக்க உள்ளார். இதில், தமிழகத்தின் புகழ்பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து, இசை, நடன நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர்.

சென்னையில் பல்வேறு கடற்கரைகள் மற்றும் பூங்காக்களில், 20 இடங்களில், 15 முதல் 18ம் திகதி வரை நான்கு நாட்கள், சென்னை சங்கமம் நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. இதற்காக, மாநிலம் முழுதும் இருந்து 1,500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

தமிழக மக்கள் விரும்பி உண்ணும் பல உணவுகளை கொண்ட அரங்குகள் அமைத்து, உணவு திருவிழாவும் நடத்தப்பட உள்ளது. பூம்புகார் நிறுவனத்தின் கைவினைப் பொருட்கள் விற்பனை அரங்கும் அமைக்கப்பட உள்ளது. (ஐ)

# பாட்டிலில் விற்கும் குடிநீருக்கு புதிய விதிமுறைகள் அறிவிப்பு வரும் ஜன. , 1 முதல் அமலுக்கு வருகிறது

'பாட்டில்களில் குடிநீரை அடைத்து விற்கும் நிறுவனங்கள், வரும் ஜன.,1 முதல் புதிய தரப்பரிசோதனை விதிகளை பின்பற்றுவது கட்டாயம்' என எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., எனும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் அறிவித்துள்ளது.

நம் நாட்டில் தற்போது பாட்டில்களில் குடிநீரை அடைத்து விற்கும் நிறுவனங்கள், இந்திய தர நிர்ணய அமைப்பிடம்,பி.ஐ.எஸ்., சான்றிதழ் மற்றும் உணவு பாதுகாப்புத்துறையிடம் இருந்து விற்பனைக்கான உரிமம் பெறுவது கட்டாயமாக உள்ளது.

கடந்தாண்டு பி.ஐ.எஸ்., சான்றிதழ் கட்டாயம் என்பதை நீக்கியதோடு, பாட்டில்களில் அடைத்து விற்கப்படும் குடிநீர், மினரல் குடிநீர் ஆகியவற்றை, அதிக ஆபத்துமிக்க தயாரிப்பு பிரிவாக எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., வகைப்படுத்தி இருந்தது. இந்நிலையில், எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., நேற்று வெளியிட்ட உத்தரவில் தெரிவித்துள்ளதாவது:

இந்திய சந்தையில், பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், குடிநீரின் தரம், பாதுகாப்பு மற்றும் அதில் உள்ள தாதுப்பொருட்கள் அளவை எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., நிர்ணயித்துள்ளது. இதன்படி, குடிநீரில் உள்ள நுண்கிருமிகள் தொடர்பான அளவீடுகளை, மாதம் ஒருமுறை கட்டாயம் பரிசோதிப்பதோடு, பிற அளவீடுகளை, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். மேலும், உணவு சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், இரண்டு ஒழுங்குமுறை அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ் பெற தேவையில்லை என அரசின் உத்தரவுக்கு இணங்க, பி.ஐ.எஸ்., சான்றிதழ் பெறுவது நீக்கப்பட்டுள்ளது.

இனி குடிநீர் நிறுவனங்கள், எப்.எஸ்.எஸ்.ஏ.ஐ., உரிமம் மட்டும் பெற்றால் போதுமானது.இவ்வாறு அதில் தெரிவித்துள்ளது. (ஐ)



# உழவர் அலுவலர் தொடர்பு திட்ட அரசாணைகளை ரத்து செய்ய அண்ணாமலை வலியுறுத்தல்

'விவசாயிகள் நலன், அலுவலர்களின் குடும்ப நலன் கருதி, உழவர் அலுவலர் தொடர்பு திட்ட அரசாணைகளை ரத்து செய்ய வேண்டும்' என, தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: தி.மு.க., அரசு வெளியிட்டுள்ள, 'உழவர் அலுவலர் தொடர்பு திட்டம் 2.0' தொடர்பான அரசாணை, 'கள அலுவலர் ஒருங்கிணைப்பு' என்ற பெயரில், தோட்டக்கலை துறையின் செயல்திறனை குலைக்கும் வகையில் உள்ளதை எதிர்த்து, தோட்டக்கலை துறை அலுவலர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தோட்டக்கலை சாகுபடி பரப்பு 13.50 சதவீதம் மட்டுமே என்றாலும், உற்பத்தி மதிப்பில் 30.50 சதவீதம் மற்றும் தமிழக வேளாண் ஏற்றுமதியில், 58 - 60 சதவீத பங்கு வகிக்கிறது.

இத்தகைய உயர் மதிப்பு துறைக்கு தனி நிர்வாகமும், துறைசார் நிபுணத்துவமும் அவசியம். ஆனால், இந்த திட்டத்தின் கீழ் வேளாண்மை, வேளாண் விற்பனை துறைகள் ஒன்றிணைக்கப்பட்டு, ஒரே அலுவலருக்கு பல துறை திட்டங்களை ஒப்படைப்பது, நிர்வாக குழப்பத்தையும் செயல்திறன் குறைவையும் உருவாக்கும்.


தற்போது, தமிழக தோட்டக்கலை துறையில், தொழில்நுட்ப அலுவலர்கள் பலருக்கு முன் அறிவிப்பு இன்றி, தொலைதுார மாவட்டங்களுக்கு அவசர பணியிட மாற்ற ஆணைகள் வழங்கப்பட்டு உள்ளன.

அதனால், அவர்கள் கடுமையான பொருளாதார சுமை மற்றும் மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள தோடு, அவர்களது குழந்தை களின் கல்வி தொடர்ச்சி யும், எதிர்காலமும் பாதிக்கப்பட்டு உள்ளது. ஆண்டுதோறும், 1,000 தோட்டக்கலை பட்டதாரிகள் உருவாகின்றனர். இந்த துறையின் தனித்துவம் குலைந்தால், வேலைவாய்ப்பு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, திறன் முதலீடு ஆகியவை, நீண்ட காலத்தில் கடுமையாக பாதிக்கப்படும்.

எனவே, விவசாயிகள் நலன், உணவு பாதுகாப்பு, ஏற்றுமதி திறன், துறை அலுவலர்களின் குடும்ப நலன் மற்றும் குழந்தைகளின் கல்வி எதிர்காலம் கருதி, அரசாணைகளை உடனே முழுதுமாக ரத்து செய்ய வேண்டும். தோட்டக்கலை அலுவலர்களுக்கான அவசர இடமாற்ற ஆணைகள் நிறுத்தப்பட வேண்டும். தனி துறையாக தோட்டக்கலை தொடர வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)



# கர்மா - துன்பத்தில் வைத்திருக்க ஏற்படுத்தப்பட்ட தந்திரமான சூழ்ச்சியா?



அன்று நீங்கள் கர்மா பற்றி பேசும்போது, “ஒரு நபரின் கர்மாவை அவருக்குள் பதிவுசெய்ய மனம், உடல் மற்றும் சக்தி போன்ற பல செயல்முறைகள் உயிருக்கு உள்ளன” என்றீர்கள் மனம் போனாலும் கூட, அது உடலிலும் சக்தியிலும் செதுக்கப்பட்டுவிடுகிறது. இது எல்லாவற்றையும் துன்பத்தில் வைத்திருக்க ஏற்படுத்தப்பட்ட மிகவும் விரிவான மற்றும் தந்திரமான சூழ்ச்சி போல் தெரிகிறது. ஏன் இப்படி?

பாருங்கள், நான் பேசும்போதெல்லாம், என் கர்மாவைப் பதிவுசெய்ய உங்களிடம் மூன்று பதிவு கருவிகள் உள்ளன. இது நான் என் வார்த்தையை மீற முடியாமல் இருப்பதை உறுதி செய்யும் ஒரு தந்திரமான சூழ்ச்சி. ஒரு கவனமற்ற தருணத்தில் நான் ஒரு வாக்குறுதி அளித்தால், நான் அதை மீற முடியாமல் இருப்பதை உறுதிசெய்ய உங்களிடம் மூன்று பதிவுகள் உள்ளன.

கர்மா என்பது நீங்கள் புரிந்துகொண்டது போல் அல்ல. அதில் எந்த தீமையும் இல்லை. நீங்கள் யாராக இருக்கிறீர்களோ அது உங்கள் கர்மாவினால் மட்டுமே. நீங்கள் பிறந்த க்ஷணத்திலிருந்து இந்த க்ஷணம் வரை, நீங்கள் செய்த, நினைத்த, உணர்ந்த மற்றும் அனுபவித்த அனைத்தும்தான் உங்கள் கர்மா. அதுதான் நீங்கள் இப்போது யாராக இருக்கிறீர்கள் என்பதை நிர்ணயிக்கிறது.

அதுதான் உங்களை இந்த இடத்திற்கு கொண்டு வந்துள்ளது. எனவே கர்மா ஒரு தீய சூழ்ச்சி அல்ல. ஆம், இது ஒரு கட்டுப்பாடுதான், ஆனால் கர்மா ஒரு பாதுகாப்பும் கூட.

கர்மா தான் இப்போது உங்கள் உடல் இருப்புக்கான அடிப்படை. கர்மப் பதிவு இல்லையெனில், இந்த உடலுடன் உங்களை பிணைத்துக்கொள்ள முடியாது. கர்மா என்பது உங்களை இந்த உடலுடன் பிணைக்கும் சிமெண்ட் போன்றது. உங்கள் அனைத்து கர்மாவையும் நாம் அகற்றினால், இந்த க்ஷணமே நீங்கள் உங்கள் உடலை விட்டு நீங்குவீர்கள், இப்போது அது எங்கள் கைகளில் வேண்டாம். எனவே, உங்கள் உடல், மனம், உணர்வு மற்றும் சக்தி ஆகிய அனைத்து நிலைகளிலும், உங்களைப் பற்றிய எதுவும் ஒருபோதும் இழக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்யவே இந்த பதிவுகள் நடைபெறுகின்றன.

உங்களில் மிக அடிப்படையான உள்ளுணர்வு சுய-பாதுகாப்பு. உங்களைப் பாதுகாத்துக்கொள்ள, நீங்கள் உங்களைச் சுற்றி ஒரு சுவரைக் கட்டினீர்கள், மேலும் குறிப்பிட்ட காலத்திற்கு இந்த சுவரையும் அது தந்த பாதுகாப்பையும் நீங்கள் அனுபவித்தீர்கள். ஆனால் உங்களில் வரம்பற்ற முறையில் விரிவடைய விரும்பும் மற்றொரு பரிமாணமும் உள்ளது. இப்போது, உங்களின் அந்தப் பரிமாணம் திடீரென இந்தச் சுவர் ஒரு சிறைச்சாலை என்று சொல்லத் தொடங்குகிறது. அது சுவரை உடைத்து செல்ல விரும்புகிறது. ஆனால் சுய-பாதுகாப்புக்காகப் போராடும் உங்களின் மற்றொரு பகுதி சுவரை வலுப்படுத்த விரும்புகிறது. அது சுவரை மேலும் மேலும் தடிமனாக்க விரும்புகிறது. ஒரு மனிதனைப் பார்த்தால், சார்லஸ் டார்வினின் கோட்பாட்டின்படி சென்றாலும் கூட, உங்கள் வரலாறு விலங்கு இயல்பு தான் ஆனால் உங்களில் தொடர்ந்து விரிவடைய ஏங்கும் ஏதோ ஒன்று இருக்கிறது. இந்த ஏக்கத்தைப் பார்த்தால், அது எந்த புள்ளியிலும் முடிவடையப் போவதில்லை என்பதைக் காணலாம். அது வரம்பற்றதாக மாறினால் தவிர திருப்தி அடையாது.

உங்கள் வரலாறு விலங்கு இயல்பு. உங்கள் எதிர்காலம் தெய்வீகத்தன்மை. இப்போது நீங்கள் ஊசலாட்டம் போல இரண்டுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களில் ஒரு பகுதி, உங்களுக்குள் உள்ள வலுவான உள்ளுணர்வான சுய பாதுகாப்பு. உங்களில் மற்றொரு பகுதி அனைத்து வரம்புகளையும் உடைக்க ஏங்குகிறது. கர்மா என்பது சுய பாதுகாப்பின் சுவர். ஒரு காலத்தில் நீங்கள் அதை மிகுந்த கவனத்துடன் கட்டினீர்கள், ஆனால் இப்போது நீங்கள் உங்களுக்குள்ளே சிறைப்படுத்தப்பட்டதாக உணர்கிறீர்கள். கர்மா என்பது சுய சிறைப்படுத்தலின் மாளிகை. உங்களால் அதனுடன் இருக்க முடியாது அது இல்லாமலும் இருக்க முடியாது, அதுதான் பிரச்சனை. எனவே இப்போது நீங்கள் உங்கள் சிறையின் அளவை விரிவுபடுத்த முயற்சிக்கிறீர்கள், ஆனால் ஒருவேளை நாங்கள் உங்களை 5 - 5 சிறிய அறையில் பூட்டி வைத்தால் என்ன செய்வீர்கள்? உங்கள் விருப்பப்படி அல்லாமல் உங்களை அங்கே முழுமையாக பூட்டி வைத்தால் - அப்போது நீங்கள் சுதந்திரத்திற்காக ஏங்குவீர்கள். உங்கள் சுதந்திரம் பற்றிய எண்ணம் ஆசிரமத்தின் சுவர்களாக, அதாவது வேலியாக இருக்கும்.

உங்களை அதிலிருந்து விடுவித்தால், அது மிகப்பெரிய சுதந்திரம் போல் தோன்றும், ஆனால் மூன்று நாட்களுக்குள் நீங்கள் மலைகளைப் பார்ப்பீர்கள், வானத்தைப் பார்ப்பீர்கள், நுழைவு வாயிலைப் பார்ப்பீர்கள், உங்கள் சுதந்திரம் பற்றிய எண்ணம் ஆசிரமத்தின் வாயிலிலிருந்து வேறு ஏதோ ஒன்றாக விரிவடையும். சரி, நீங்கள் தாணிக்கண்டி வரை சென்று வரலாம் என்று நாங்கள் சொல்வோம். அது சிறிது காலம் அற்புதமான சுதந்திரமாகத் தெரியும், ஆனால் பிறகு நீங்கள் கோயம்புத்தூர் செல்ல விரும்புவீர்கள். கோயம்புத்தூருக்கு போதுமான பயணங்களை மேற்கொண்டால், கோயம்புத்தூர் போதாது என்று உணர்வீர்கள். பாரம்பரிய ஆன்மீகத்தால் மிகவும் ஈர்க்கப்பட்ட சிலர் இமயமலைக்குச் செல்ல விரும்புகிறீர்கள். இல்லையெனில், நீங்கள் பெரிய நகரத்திற்கோ அல்லது வேறு எங்காவதோ செல்ல விரும்புவீர்கள். எனவே உங்கள் சிறைப்படுத்தப்பட்ட எண்ணம் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கிறது. சுதந்திரம் பற்றிய உங்கள் எண்ணமும் தொடர்ந்து வளர்ந்துகொண்டே இருக்கிறது.

வாழ்க்கையை படிப்படியாக புரிந்துகொள்ள ஏன் ஒரு வாழ்நாள் முழுவதும் செலவிட்டு, இறுதியில் ஒரு முட்டாளைப் போல உணர்ந்து இறக்க வேண்டும்? இது பற்றி பார்ப்பதற்கான நேரம் இதுதான். உங்களது சுதந்திரம் பற்றிய கருத்து எல்லையற்றது. உங்கள் இருப்பு எல்லையற்ற தன்மையை விட குறைவான எதையும் ஏற்றுக்கொள்ளாது. உங்களை நீங்களே பார்த்தால் இது தெளிவாகத் தெரியும்.

நீங்கள் எல்லையற்றவராக மாற விரும்பினால், உடல்ரீதியான தடைகளை உடைப்பது உங்களை எல்லையற்றவராக மாற்றாது, ஏனெனில் உடல்ரீதியானது ஒருபோதும் எல்லையற்றதாக இருக்க முடியாது. உடல்ரீதியான யதார்த்தத்தின் வரம்புகளைக் கடந்து, உடல்ரீதியான இருப்பையே தாண்டிச் சென்றால் மட்டுமே எல்லையற்ற தன்மைக்கான வாய்ப்பு உள்ளது.

கர்மா என்பது உங்களை உடலில் வேரூன்றச்செய்வது. இது இல்லாமல், வேரூன்ற வழியே இல்லை. எனவே இயற்கை அல்லது படைத்தல், நீங்கள் செயல்படுவதற்கு அடித்தளம் ஒன்று இருப்பதை உறுதி செய்கிறது. உடலைப் பற்றிக்கொள்ளாமல் தேடல் என்பதே இல்லை. உடலற்ற உயிர் தேர்ந்தெடுத்து தேடுதலில் ஈடுபட முடியாது. அவர் குறிப்பிட்ட நிலைக்கு வளர்ச்சி அடையாத வரை, போக்குகளின் மூலமாக மட்டுமே தேடுதலில் ஈடுபட முடியும், தேர்வின் மூலம் அல்ல. ஆனால் உடலுடன் இருக்கும் உயிருக்கு, உண்மையில் ஒவ்வொரு க்ஷணமும் தேர்வுதான். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் விழிப்புணர்வுடன் இருந்தால், ஒவ்வொரு க்ஷணமும் தேர்வின் மூலமாகவே இருக்கிறது.

# 30 ஆண்டுகளில் முதல் முறையாக சவுதியில் திடீர் பனிப்பொழிவு



சவுதியில் 30 ஆண்டுகளில் முதல் முறையாக பனியால் சூழப்பட்டது. கடும் வெப்பத்திற்கும் பரந்த பாலைவன நிலப்பரப்புகளுக்கும் பெயர் பெற்ற நாடான சவூதி அரேபியாவில் சமீபகாலமாக பனிப்பொழிவு, கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக வடக்கு சவூதி அரேபியாவில் ஆச்சரியமூட்டும் பனிப்பொழிவு பதிவாகியுள்ளது. இது தபூக் மாகாணத்தில் உள்ள மலைத்தொடர் முழுவதும் பனி படர்ந்துள்ளது.

சுமார் 2,600 மீட்டர் உயரம் கொண்ட ஜெபல் அல்-லாவ்ஸ் மலையில் அமைந்துள்ள உயரமான சுற்றுலாத் தலமான ட்ரோஜெனாவில், லேசான மழையுடன் பனி போர்த்தியிருந்தது. ஹைல் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் உட்பட ஹைல் பிராந்தியத்தின் சில பகுதிகளிலும் பனிப்பொழிவு காணப்பட்டது. அதிகாலை நேரங்களில் சில இடங்களில் வெப்பநிலை 0 டிகிரி செல்சியஸ/க்கும் கீழே சரிந்தது. (ஐ)

## ரஷ்யாவில் புகுந்து உக்ரைன் தாக்குதல்: எண்ணெய் கிணறு, 2 விமானங்கள் 2 கப்பல்கள் டிரோன் மூலம் அழிப்பு



ரஷ்யாவில் புகுந்து உக்ரைன் நடத்திய தொடர் தாக்குதலில் ஒரு எண்ணெய் முனையம், ஒரு எண்ணெய் குழாய்வழித்தடம், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு போர் விமானங்கள், இரண்டு கப்பல்கள் தகர்க்கப்பட்டன. இந்த திடீர் தாக்குதலில் தமன்னெப்டிகாஸ் எண்ணெய் முனையம், ஒரு வெடிமருந்து கிடங்கு, தெற்கு கிராஸ்னோடர் பிராந்தியத்தில் ஒரு குழாய்வழித்தடம், இரண்டு கப்பல்துறைமுகம், 2 கப்பல்கள் சேதமடைந்தன.

இதனால் பெரும் தீவிபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதோடு டொனெட்ஸ்க் பிராந்தியத்தின் ரஷ்யக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் உள்ள ஒரு வெடிமருந்து கிடங்கு தகர்க்கப்பட்டது. மேலும் டிரோன்களுக்கான ரஷ்ய ஏவுதளமும் தாக்கப்பட்டது. மேற்கு ரஷ்யாவில் உள்ள லிபெட்ஸ்க் நகருக்கு அருகிலுள்ள ஒரு தளத்தில் 2 ரஷ்ய போர் விமானங்கள் தகர்க்கப்பட்டன. உக்ரைனில் இந்த திடீர் தாக்குதலால் ரஷ்யாவில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ஐ)

## மாஸ்கோவில் கார் குண்டுவெடிப்பு: ரஷ்யாவின் ராணுவ தளபதி உயிரிழப்பு

ரஷ்யா தலைநகர் மாஸ்கோவில் நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பில் அந்நாட்டின் ராணுவ ஜெனரல் உயிரிழந்தார். உக்ரைன் நேட்டோ நாடுகளை இணைவதை எதிர்த்து கடந்த 2022 பிப்ரவரியில் ரஷ்யா தொடங்கிய போர் தீர்வு காணடபடாமல் தொடர்ந்து நீடித்து வருகிறது. உக்ரைன் -ரஷ்யா இடையே நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பல்வேறு முயற்சிளை மேற்கொண்டு வருகின்றார். இரு நாடுகளுக்கும் இடையிலான போர் நிறுத்தம் தொடர்பான முன்மொழிவு குறித்து பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன.

எனினும் இரு நாடுகளும் ஒன்றின் மீது ஒன்று தாக்குதல் நடத்திவருகின்றன. இந்நிலையில் ரஷ்ய ஜெனரல் சர்வரோவ் தனது காரை இயக்கியபோது வெடிகுண்டு பலத்த சத்தத்துடன் வெடித்தது. ரஷ்யா தலைநகர் மாஸ்கோவில் நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பில் அந்நாட்டின் ராணுவ ஜெனரல் உயிரிழந்தார். உக்ரைனின் உளவுத்துறை அமைப்புகளின் உதவியுடன் வெடிகுண்டு வைக்கப்பட்டதாக ரஷ்ய அரசு புகார் கூறியுள்ளது. எனினும், உக்ரைன் இது குறித்து இதுவரை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை.

ரஷ்ய தலைநகரின் தெற்குப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவ இடத்திற்கு விசாரணை அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. தொடர்ந்து இச்சம்பவம் குறித்து ரஷ்யா தீவிர விசாரணை மேற்கொண்டு வருகிறது. கடந்த ஏப்ரல் மாதம் ஜெனரல் யாரோஸ்லாவ் மோஸ்காலிக் மாஸ்கோவில் நடந்த கார் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அதே சமயம் ஜெனரல் இகோர் கிரிலோவ் 2024 டிசம்பரில் ஸ்கூட்டரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





டெக்சாஸில் மெக்சிகோ கடற்படையின் சிறிய ரக விமானம் விழுந்து நொறுங்கியதில் 5 பேர் உயிரிழந்தனர். 7 பேருடன் சென்ற சிறிய ரக விமானம் அமெரிக்காவின் கால்வெஸ்டன் பகுதியில் விழுந்து நொறுங்கியது. விமான விபத்தில் 5 பேர் உயிரிழந்த நிலையில் இருவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். விமானத்தில் ஒரு குழந்தை உட்பட 4 கடற்படை அதிகாரிகள் பயணம் செய்ததாக மெக்சிகோ கடற்படை தகவல் தெரிவித்துள்ளது. (ஐ)

## வங்கதேசத்தில் பதற்றம் மற்றொரு மாணவர் தலைவர் துப்பாக்கியால் சுடப்பட்டார்: மீண்டும் மர்ம நபர்கள் கைவரிசை



வங்கதேசத்தில் கடந்த 2024ம் ஆண்டு மாணவர் போராட்டம் காரணமாக பிரதமர் ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்தது. அவர் இந்தியாவில் தஞ்சமடைந்தார். அதைத் தொடர்ந்து, முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு பதவியில் உள்ளது. வரும் பிப்ரவரி மாதம் பொதுத் தேர்தல் நடக்க உள்ள நிலையில், மாணவர் போராட்டத்தின் மூலம் பிரபலமான இன்குலாப் மஞ்ச் மாணவர் அமைப்பின் தலைவர் ஷெரீப் உஸ்மான் ஹாதி மர்ம நபர்களால் துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டார்.

இதனால் வங்கதேசத்தில் மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. இந்நிலையில், மாணவர் போராட்டத்தில் ஹாதிக்கு அடுத்தபடியாக 2ம் கட்ட இளைஞர் தலைவராக இருந்த தேசிய குடிமக்கள் கட்சியின் குல்னா பிரிவு தலைவரும், கட்சியின் தொழிலாளர் முன்னணியின் மத்திய ஒருங்கிணைப்பாளரான மொட்டலேப் ஷிக்தர் குல்னாவில் நேற்று மர்ம நபரால் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார். தலையின் இடது பக்கத்தில் குண்டு பாய்ந்த நிலையில் ரத்தம் சொட்ட சொட்ட ஷிக்தர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக அவரது கட்சி தலைவர்கள் தெரிவித்துள்ளனர். அவருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்தியாவுக்கு விசா சேவையை நிறுத்தியது வங்கதேசம்: வங்கதேசத்தில் நிலவும் பதற்றம் காரணமாக விசா சேவையை நிறுத்திய இந்தியாவுக்கு பதிலடியாக இந்தியாவுக்கான விசா சேவையையும் நிறுத்துவதாக வங்கதேசம் நேற்று அறிவித்தது. டெல்லியில் உள்ள தூதரக மற்றும் விசா சேவைகள் மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக வங்கதேச உயர் ஆணையம் தெரிவித்துள்ளது.

வங்கதேசத்தில் சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை தடுக்க இடைக்கால அரசு தவறியதைக் கண்டித்து சிறுபான்மையினர்களான இந்துக்கள் டாக்காவில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## யாழ்.தேவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த ரயிலுடனேயே மேற்படி நபர் மோதுண்டுள்ளார்.

இந்த விபத்தில் யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைச் சேர்ந்த இரத்தினராசா கிருஷ்ணமோகன் (வயது 52) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அர்ச்சுனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை.

இதனையடுத்து நீதிவான் பிடியாணை உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிகளை ஆரம்பித்துள்ள இத்தருணத்தில், நாட்டின் உயர்மட்டத் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதை நோக்கமாகக்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாகவே இந்தச் சந்திப்பு அமைந்தது.

இந்தக்கலந்துரையாடலின்போது, இலங்கையில்ரயில் பாதைகள் மற்றும் பாலங்களை மீளக்கட்டியெழுப்புதல், விவசாயத் துறையைப் பலப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதை இந்திய வெளிவிவகார அமைச்சர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

அத்துடன், வலுவான சட்ட, நிர்வாக மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளின் ஆதரவுடன், பேரிடர் சூழ்நிலைகளை எதிர்கொள்வதற்கான வினைத்திறன் மிக்க பொறிமுறைகளைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருதரப்பினரும்தற்போதைய நிவாரண முயற்சிகளை மீளாய்வு செய்ததுடன், மீட்பு நடவடிக்கைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் ஆராய்ந்தனர்.

'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட அழிவுகளுக்குப் பின்னரான மீட்புச் செயற்பாடானது, உடனடி நிவாரண முயற்சிகளுக்கு அப்பால் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும்உட்கட்டமைப்பு வசதிகளை மீளக்கட்டியெழுப்புதல் போன்ற நீண்டகால நடவடிக்கைகளையும்உள்ளடக்கியது எனக் குறிப்பிட்ட பிரதமர், இதன்போது இந்திய அரசு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவிற்காகத் தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார்.

நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதன் ஓர் அங்கமாகவே பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவை உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

அனர்த்த நேரத்தின்போது வெளிப்பட்ட மக்களின் ஒற்றுமை, அவர்களின் தன்னார்வத் தொண்டு மற்றும் கூட்டுச் செயற்பாடுகளைப் பாராட்டிய பிரதமர், ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியம், அனர்த்தங்களுக்குள்ளாகும் தன்மையைக் குறைத்தல் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளைப் பலப்படுத்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

## இந்தியாவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும்இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானதோடு ,

இரு நாடுகளுக்கும்இடையிலான உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கப்படும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியா இலங்கைக்கு வழங்கிய சலுகைப் பொதியை அடையாளப்படுத்தும் வகையில் கிளிநொச்சி ஏ-35 வீதியில் உள்ள பேல் பாலத்தை திறந்து வைக்கும் நிகழ்வு, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் இந்திய மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்களின் பங்கேற்புடன் ஒன்லைனின் ஊடாக நடைபெற்றது.

ஜனாதிபதிக்கும்இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளில்வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தைகளில், இந்திய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இந்திய வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் புனித் அக்ரவால், இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் சத்யஞ்சல் பாண்டே மற்றும் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா, ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உயிலங்குளக்கட்டின் கீழ்பகுதியால் வீதியை அமைக்க நிதிதேவை ரவிகரன் எம்.பி கோரிக்கை!

உயிலங்குளக்கட்டின் கீழ்பகுதியால் வீதியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வீதியை புனரமைக்க நிதிதேவை எனவும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெலிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள உயிலங்குளத்திற்கான பிரதான வீதியாக உயிலங்குளத்தினுடைய கட்டுப்பகுதியை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் அவ்வீதியைப் பயன்படுத்துபவர்கள் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்குரிய சுமார் 800மீற்றர் வரையிலான குறித்த வீதியை குளக்கட்டின் கீழ்பகுதியால் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபாலவிடம் வலியுறுத்தியதுடன் அவ்வீதியை அமைப்பதற்கான நிதி தேவை எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் வலியுறுத்தலையடுத்து, குறித்த உயிலங்குளம் வீதியை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவை அமைச்சர் ஆனந்த விஜயபால வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கோரியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டசெயலகத்தில் நேற்று இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் தொடர்பான விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

துணுக்காய் உயிலங்குளம் வீதியில், உயிலங்குளம் குளக்கட்டினை பிரதானமான போக்குவரத்துப் பாதையாக அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் உயிலங்குளம், குளக்கட்டின் கீழ்பகுதியினால் போக்குவரத்து வீதியினை அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எனவே குளக்கட்டின் கீழ்ப்பகுதியால் சுமார் 800மீற்றர் தூரம்வரையான வீதியை அமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என தெரிவித்தார்.

இந்நிலையில் இதுதொடர்பில் துணுக்காய் பிரதேசசெயலாளர் இதற்கு பதிலளிக்கையில்,

குளக்கட்டின் கீழ்பகுதியால் வீதி அமைப்பதானால் வயல்காணி மற்றும் தனியார் மேட்டுக்காணி ஒன்றையும் ஊடறுத்தே இந்த வீதியினை அமைக்கமுடியும்.

அண்மையில் ஆளுநருடன் இடம்பெற்ற கலந்துரையாடலொன்றில் இந்த வீதி அமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அக்கலந்துரையாடலில் இவ்வீதியை குளக்கட்டின் கீழ்பகுதியினால் அமைப்பதற்கு உரிய தரப்பினரிடமிருந்து காணியினைப் பெற்றுக்கொள்ளுமாறும் எமக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்குள் இவ்வீதியினை அமைப்பதற்குரிய காணியை வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு எம்மால் பெற்றுக்கொடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இந்நிலையில் இவ்வாறு பிரதேசசெயலகம் காணியினைப் பெற்றுக்கொடுத்த பிற்பாடு உயிலங்குளக் கட்டின் கீழ்பகுதியால் வீதியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? என நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில் அதற்கு வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் பதிலளிக்கையில்,

குளக்கட்டின் பகுதி தாழ் நிலப்பகுதியாகும். எனவே அந்தப்பகுதியில் தரைமுன்னேற்ற ஆய்வுகளையும் மேற்கொள்ளவேண்டியுள்ளது. மேலும் அவ்வீதி 01மஅ வீதி எனில், அவ்வீதியை அமைப்பதற்கு ஏறத்தாள 200மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படும்.

அதற்குரிய நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றால் குறித்த வீதியை அமைக்கின்ற வேலைத்திட்டத்தினை ஆரம்பிக்கமுடியும் என தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில், அமைச்சர் அதற்காகத்தான் வருகைதந்துள்ளார். எனவே அவரிடமிருந்து அவ்வீதியை அமைப்பதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ளமுடியுமெனத் தெரிவித்தார். இந்நிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால குறித்த வீதியை அமைப்பதற்கான திட்டமுன்மொழிவினை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பண்டிகை காலத்தில் முறையான பாதுகாப்பு –இலங்கை பொலிஸார்!

எதிர்வரும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகைக் காலங்களில் நகரங்களிலும் மதத் தலங்களிலும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக முறையான பாதுகாப்பு நடவடிக்கை மற்றும் போக்குவரத்துத் திட்டம் செயல்படுத்தப்படும் என இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக்காலத்தில்முறையான பாதுகாப்பு நடவடிக்கை மற்றும் போக்குவரத்துத் திட்டத்தை செயல்படுத்துமாறு அனைத்து மூத்த அதிகாரிகள், பிரிவுத் தலைவர்கள் மற்றும் நிலையத் தளபதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, பண்டிகை நடவடிக்கைகளுக்காக அதிக மக்கள் கூடும் முக்கிய நகரங்களில், பொதுமக்கள் தங்கள் நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ளும் வகையில், சிறப்பு பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிறிஸ்துமஸ் வழிபாடுகளை நடத்தும் கத்தோலிக்க தேவாலயங்கள்மற்றும்தொடர்புடைய மத நிறுவனங்களுக்கு, வழிபாட்டாளர்களைப் பாதுகாக்க, மதத் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து, ஒருங்கிணைந்த பாதுகாப்பு வழங்கப்படும்.

முக்கிய நிறுவனங்கள், வணிக வளாகங்கள் மற்றும் நெரிசலான பொது இடங்களைச் சுற்றி பாதுகாப்பு நடவடிக்கைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன.

நகர்ப்புறங்களில் தகவல்களைச் சேகரிக்கவும் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்கவும் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் சாதாரண உடையில் காவல்துறை அதிகாரிகள் நிறுத்தப்படுவார்கள்.

அதிக கூட்டத்தை ஈர்க்கும்ஹோட்டல்கள், பொழுதுபோக்கு இடங்களும் மேம்பட்ட பாதுகாப்பு கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும்.

சந்தேகத்திற்கிடமான செயல்களைக் கவனித்தாலோ அல்லது கவலைக்குரிய தகவல் கிடைத்தாலோ, அருகிலுள்ள பொலிஸார்,பொலிஸார் ரோந்துப் பிரிவு அல்லது போக்குவரத்துப் பிரிவுக்குத் தெரிவிக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தேசியப் பொறுப்பின் ஒரு பகுதியாக இந்தப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்று இலங்கை பொலிஸார் வலியுறுத்துகின்றனர். (ஐ)

# இடைநிறுத்தப்பட்டிருந்த 8 வைத்தியசாலைகளின் கட்டுமானம் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.23

கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த சுகாதார சேவை நிறுவனங்களின் கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுகாதாரம்மற்றும்வெகுஜன ஊடக அமைச்சர் இதற்கான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, பாரியளவிலான கருத்திட்டங்களை மீண்டும் மூலோபாயப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் குழுவின் பரிந்துரைக்கு அமைய, பல சுகாதாரத் துறை கட்டுமானத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது நாட்டில் நிலவும் சுகாதார சேவைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அதிகரித்து வரும் சுகாதார சேவைகளுக்கான கேள்வியைக் கருத்திற் கொண்டு, பல்வேறு கட்டங்களில் உள்ள இந்தத் திட்டங்களைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் அரசாங்கத்தால் கண்டறியப்பட்டுள்ளது.

இதனைக் கருத்திற் கொண்டு, தற்போது வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ள 08 சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான திட்டங்களின் மொத்த செலவு மதிப்பீடு மற்றும் கால அட்டவணையைத் திருத்தம் செய்யவும், அவற்றின் கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.12.2025 வெளியிடப்பெற்றது.